சுருக்கம்

கலை பண்பாட்டுத் துறை – அறிவிப்புகள் 2018–2019ஆம் ஆண்டு – புதுக்கோட்டை மாவட்ட அரசு இசைப்பள்ளி – புதிய கட்டடம் கட்டுதல் – ரூ.100.00 இலட்சம் – நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்–2) துறை

அரசாணை (நிலை) எண். 9

நாள்: 28–01–2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விளம்பி வருடம், தை 14

படிக்கப்பட்டது:-

1. 2018–2019ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் கலை பண்பாட்டுத் துறையின் அறிவிப்பு வரிசை எண் 3
2. கலை பண்பாட்டு ஆணையரின் கடித ந.க. எண் 3854/ஆ2/2018, நாள் 03.08.2018, 23.11.2018 மற்றும் 28.11.2018

-------

ஆணை:

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 25.06.2018 அன்று நடைபெற்ற கலை பண்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையின் போது "வாடகை கட்டடத்தில் இயங்கி வரும் புதுக்கோட்டை மாவட்ட அரசு இசைப்பள்ளியில் பயிலும் மாணாக்கர்களின் கல்வி நலன் கருதி, புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை வட்டத்தில் மாவட்ட அரசு இசைப்பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு, தொடராச் செலவினமாக ரூ.100 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்" என மாண்புமிகு அமைச்சர், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், புதுக்கோட்டை மாவட்ட அரசு இசைப்பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு ரூ.100.00 இலட்சத்திற்கு 2018–2019ஆம் நிதியாண்டில் உரிய நிர்வாக அனுமதியும், நிதி ஒதுக்கீடும் வழங்கி அரசாணை வெளியிடுமாறு கலை பண்பாட்டு ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. கலை பண்பாட்டு ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று, புதுக்கோட்டை மாவட்ட அரசு இசைப்பள்ளியில் பயிலும் மாணாக்கர்களின் கல்விநலனைக் கருத்தில் கொண்டும், மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்திடும் வகையிலும், பொதுப்பணித் துறையால் தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீட்டின்படி, கலை பண்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் புதுக்கோட்டை மாவட்ட அரசு இசைப்பள்ளிக்கு புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை வட்டத்தில் புதிய கட்டடம் கட்டுவதற்கு தொடராச் செலவினமாக ரூ.1,00,00,000/–க்கு (ரூபாய் ஒரு கோடி மட்டும்) நிர்வாக அனுமதியும், நிதி ஒப்பளிப்பும் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி–3–ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட செலவினத் தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:–

4202 - கல்வி போட்டி விளையாட்டு, கலை பண்பாடு குறித்த மூலதனச் செலவு – 04 கலையும் பண்பாடும் – 101 நுண்கலைக்கல்வி மாநிலச் செலவினங்கள் JE கட்டடங்கள் – கலை மற்றும் பண்பாடு (தலைமைப் பொறியாளர்) (கட்டடங்கள்) நிர்வாகத்தில் உள்ளவை – 16 பெரும் பணிகள்
(த.தொ.கு 4202 04 101 JE 1600)

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம், 2019–2020ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், மேலே ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2019–2020ஆம் நிதியாண்டில் மேற்கொள்ள கலை பண்பாட்டு ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

6. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையைப் பெற்று, புதுக்கோட்டை பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் உரிய செலவினத்தை மேற்கொள்ள தேவையான அனுமதியை வழங்குமாறும் கலை பண்பாட்டு ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணையின் பொருட்டு மேற்கொள்ளப்படும் பணிகளின் முன்னேற்ற அறிக்கையினை அவ்வப்போது அரசுக்கு அனுப்புமாறும், பணிகள் முடிவுற்றபின், அதற்கான பயனீட்டுச் சான்றினை அனுப்புமாறும் கலை பண்பாட்டு ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண்.2775/நிதி(கல்வி–II)த்துறை/2019, நாள் 28.01.2019–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வ வர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், கலை பண்பாட்டுத் துறை, சென்னை – 8
மாவட்ட ஆட்சித் தலைவர், புதுக்கோட்டை மாவட்டம்.
தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), பொதுப் பணித் துறை, சேப்பாக்கம், சென்னை – 5
செயற்பொறியாளர் , பொதுப் பணித் துறை, கட்டுமானம் பிரிவு, புதுக்கோட்டை
(கலை பண்பாட்டு ஆணையர் வழியாக)
மாவட்ட கருவூல அலுவலர், புதுக்கோட்டை (கலை பண்பாட்டு ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–600 009 (இருபடிகள்)
முதன்மை மாநிலக் கணக்காய்வுத் தலைவர் (G&SSA/E&RSA/A&E), சென்னை – 18
உள்துறை தணிக்கை அலுவலர், முதன்மை கணக்காய்வுத் தலைவர்
(பொது மற்றும் சமூக பகுதி) அலுவலகம், சென்னை – 9
உதவி செயற்பொறியாளர், பொதுப்பணித் துறை, கட்டடம் கட்டுமானம் உட்பிரிவு, புதுக்கோட்டை (கலை பண்பாட்டு ஆணையர் வழியாக)

இணை இயக்குநர், மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப்பள்ளி.
(கலை பண்பாட்டு ஆணையர் வழியாக)
தலைமை ஆசிரியர், மாவட்ட அரசு இசைப்பள்ளி, புதுக்கோட்டை
(கலை பண்பாட்டு ஆணையர் வழியாக)

நகல்:

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை– 9
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை – 9
அரசு தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச்செயலர், சென்னை–9
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச்செயலர், நிதித்துறை, சென்னை–9
நிதி (கல்வி–II/ வ.செ.பொ.I/வ.செ.பொ.II)த் துறை, சென்னை– 9
பொதுப்பணித் (ஒய் 2) துறை, சென்னை– 9
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச்செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை– 9
சுற்றுலா, பண்பாடு (ம) அறநிலையங்கள் (பண்–1 / பொது–2) துறை, சென்னை– 9
தொழில்நுட்ப இயக்குநர், தேசிய தகவல் மையம், சென்னை – 9
இருப்புக் கோப்பு / உதிரி.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்**

28.1.19